# 23-12-2024 செய்தி

## பிஎஸ்எல்வி சி-60 ராக்கெட்டின் நான்காம் நிலையில் 24 ஆய்வுக் கருவிகள்

- ஸ்பெடெக்ஸ் திட்டத்துக்காக விண்ணில் செலுத்தப்பட்ட உள்ள பிஎஸ்எல்வி சி-60 ராக்கெட்டின் நான்காம் நிலையில் (போயம் -4) 24 ஆய்வுக் கருவிகள் இடம்பெற்றுள்ளன என இஸ்ரோ தெரிவித்துள்ளது.
- அவற்றில் 14 ஆய்வுக் கருவிகள் இஸ்ரோ சார்பில் தயாரிக்கப்பட்டவை என்றும் 10 கருவிகள் கல்வி நிறுவனங்கள், புத்தாக்க நிறுவனங்கள் தயாரித்தவை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளன.
- ரோபோடிக் செயற்கை நுண்ணறிவு, உயிரி தொழில்நுட்பம் தொடர்பான ஆய்வுகளை அந்த கருவிகள் விண்வெளியில் முன்னெடுக்க உள்ளதாகவும் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.
- 'பாரதிய அந்தரிக்ஷாஸ்டேஷன்' எனும் இந்திய ஆய்வு மையத்தை 2035-க்குள் விண்ணில் நிறுவ இஸ்ரோ திட்டமிட்டுள்ளது.
- அதன் ஒரு பகுதியாக ஸ்பெடெக்ஸ் திட்டம் தற்போது செயல்படுத்தப்பட உள்ளது.
- இந்த திட்டத்தின்படி, விண்வெளியில் விண்கலன்களை ஒருங்கிணைக்கும் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.
- இதற்காக தலா 400 கிலோ எடை கொண்ட சேசர் மற்றும் டார்கெட் எனும் 2 விண்கலன்களை இஸ்ரோ வழிகாட்டுதலில் தனியார் நிறுவனம் வடிவமைத்துள்ளது. இந்த இரட்டை விண்கலன்கள் பிஎஸ்எல்வி சி-60 ராக்கெட் வாயிலாக ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள ஏவுதளத்தில் இருந்து விண்ணில் செலுத்தப்பட உள்ளன.
- இந்த விண்கலன்கள் புவியில் இருந்து சுமார் 700 கி.மீ தொலைவில் வெவ்வேறு சுற்றுப் பாதைகளில் நிலை நிறுத்தப்பட உள்ளன.
- அதன் பின்னர் ஒன்றோடு ஒன்று அவை ஒருங்கிணைக்கப்படும்.
- மனிதர்களை விண்ணுக்கு அனுப்பும்போது ஒரு விண்கலத்திலிருந்து மற்றொன்றுக்கு அவர்கள் மாறுவதற்கும் எரிபொருளை மாற்றிக் கொள்வதற்கும் இந்த தொழில்நுட்பம் பயன்படும்.
- இந்த திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுக்கும்பட்சத்தில் அமெரிக்காவைப் போன்று விண்வெளியில் இந்தியாவாலும் ஆய்வு மையத்தை அமைக்க முடியும்.
- அதன்படி, அந்த விண்கலன்கள் பெங்களூரில் வடிவமைக்கப்பட்டு ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவுக்கு விண்ணில் ஏவுவதற்காக அனுப்பப்பட்டுள்ளன.

## பிரதமர் மோடி பெற்ற 20 சர்வதேச விருதுகள்

- சவுதி அரேபிய அரசு சார்பில் முஸ்லிம் அல்லாத தலைவர்களுக்கு அந்த நாட்டின் உயரிய கவுரவமான 'ஆர்டர் ஆஃப் அப்துல் அஜீஸ் அல் சவுத்' விருது வழங்கப்படுகிறது.
- 2016-ல் இந்த விருது பிரதமர் மோடிக்கு வழங்கப்பட்டது.
- 2016-ல் ஆப்கானிஸ்தானின் மிக உயரிய 'ஸ்டேட் ஆர்டர் ஆப் காஜி அமீர் அமானுல்லா கான்' விருது வழங்கப்பட்டது.
- 2018-ல் பாலஸ்தீனம் சார்பில் வெளிநாட்டு பிரமுகர்களுக்கான உயரிய விருதான 'கிராண்ட் காலர் ஆப் தி ஸ்டேட் ஆப்' பாலஸ்தீன விருது அளிக்கப்பட்டது.
- 2019-ல் மாலத்தீவு அரசு சார்பில் 'ஆர்டர் ஆப் தி டிஸ்டிங்கிஸ்ட் ரூல் ஆப்' நிஷான் இசுதின் விருது வழங்கப்பட்டது.
- 2019-ல் ஐக்கிய அரபு அமீரகத்தின் உயரிய விருதான 'ஆர்டர் ஆப் சயீத்' விருது பிரதமர் மோடிக்கு வழங்கப்பட்டது.
- 2019- ம் ஆண்டில் பஹ்ரைன் அரசு சார்பில் 'கிங் ஹமாத் ஆர்டர் ஆப் தி ரினைசன்ஸ்' விருது அளிக்கப்பட்டது.
- 2020-ல் அமெரிக்க அரசு சார்பில் 'லெஜியன் ஆப் மெரிட்' விருது வழங்கப்பட்டது.
- 2023-ம் ஆண்டில் பிஜி நாட்டின் உயரிய விருதான 'கம்பேனியன் ஆப் தி ஆர்டர் ஆப் பிஜி' வழங்கப்பட்டது.
- 2023-ம் ஆண்டில் தீவு நாடான பப்புவா நியூ கினியா சார்பில் 'கம்பேனியன் ஆப் தி ஆர்டர் ஆப் லோகோஹு' விருது வழங்கப்பட்டது.
- 2023-ஆம் ஆண்டில் எகிப்து நாட்டின் மிக உயரிய விருதான 'ஆர்டர் ஆப் தி நைல்' விருது வழங்கப்பட்டது.
- 2023-ல் பிரான்ஸ் அரசு சார்பில் 'லெஜியன் ஆப் ஹானர் விருது வழங்கப்பட்டது.
- 2023-ம் ஆண்டில் கிரீஸ் அரசு சார்பில் 'கிரான்ட் கிராஸ் ஆப் தி ஆர்டர் ஆப் ஹானர் விருது வழங்கப்பட்டது.
- 2023-ம் ஆண்டில் பலாவ் நாட்டின் சார்பில் 'பலாவ் குடியரசு எபகல்' விருது வழங்கப்பட்டது.
- 2024-ல் பூடான் சார்பில் 'ஆர்டர் ஆப் தி டியூக் காலப்' விருது வழங்கப்பட்டது.
- 2024-ம் ஆண்டில் ரஷ்யாவின் மிக உயரிய விருதான 'ஆர்டர் ஆஃப் செயின்ட் ஆண்ட்ரூ' விருது அளிக்கப்பட்டது.
- 2024-ம் ஆண்டில் நைஜீரியா அரசு சார்பில் 'ஆர்டர் ஆஃப் நைஜர் விருது வழங்கப்பட்டது.
- 2024-ம் ஆண்டில் 'டொமினிகோ சார்பில் டொமினிகோ அவார்ட் ஆப் ஹானர்' விருது வழங்கப்பட்டது.
- 2024-ல் கயானா சார்பில் 'ஆர்டர் ஆப் எக்சலன்ஸ் கயானா விருது வழங்கப்பட்டது.

- 2024-ல் பார்படோஸ் சார்பில் 'ஆர்டர் ஆப் பிரீடம் ஆப் பார்படோஸ்' விருது வழங்கப்பட்டது.
- 2024-ல் குவைத் அரசு சார்பில் 'தி ஆர்டர் ஆப் முபாரக் அல் கபீர்' விருது வழங்கப்பட்டது.
- இவை தவிர ஐ.நா. சுற்றுச்சூழல் துறையின் தி எர்த் விருது, பில் கேட்ஸ் அறக்கட்டளையின் தூய்மை இந்தியா விருது, கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் சர்வதேச எரிசக்தி, சுற்றுச்சூழல் விருது, சியோல் கலாச்சார அறக்கட்டளையின் சியோல் அமைதி விருது உள்ளிட்ட ஏராளமான விருதுகளையும் பிரதமர் மோடி பெற்றுள்ளார்.

## அமைதி இழந்த உலகம்

**வல்லரசின் புதிய முகம்**

- உலக மக்கள்தொகையில் 40 சதவீதம் பேர் இந்த ஆண்டு தேர்தலைச் சந்தித்துள்ளனர்.
- குறிப்பாக, இந்தியா, அமெரிக்கா, பிரிட்டன், ரஷ்யா, பாகிஸ்தான் என 64 நாடுகளில் இந்த ஆண்டு தேர்தல் நடந்துள்ளது.
- நவம்பர் 5இல் நடைபெற்ற அமெரிக்க அதிபர் தேர்தலில் வென்ற குடியரசுக் கட்சி வேட்பாளர் டொனால்டு டிரம்ப், இரண்டாவது முறையாக அதிபராகப் பதவியேற்க இருக்கிறார்.
- அவரது மீள்வருகை சர்வதேச அளவில் பல மாற்றங்களை ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. குடியேற்றக் கொள்கையின் கடும் கட்டுப்பாடுகள் கொண்டுவரப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதால், இந்தியா உட்பட பல்வேறு நாடுகளிலிருந்து சட்டவிரோதமாகக் குடியேறியவர்கள் வெளியேற்றப்படும் சூழல் உருவாகியிருக்கிறது.
- மற்றபடி, உக்ரைன் போரை முடிவுக்குக் கொண்டுவர டிரம்ப் இப்போதே முயற்சி எடுத்துவருகிறார்.
- ரஷ்யாவுடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயாராக இருக்க வேண்டும் என்று உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கிக்கு அறிவுறுத்தியிருக்கிறார்.
- காஸா போரைப் பொறுத்தவரை, ஹமாஸ் பிடியிலிருக்கும் பிணைக்கைதிகள் விடுவிக்கப்படவில்லை என்றால் கடும் விளைவுகள் ஏற்படும் என்று எச்சரித்திருக்கும் டிரம்ப், வழக்கமான அமெரிக்க அதிபர் பாணியில் இஸ்ரேலுக்கே ஆதரவளிப்பார் என்றே பேசப்படுகிறது.

**காஸாவில் தொடரும் கண்ணீர்**

- 2023 அக்டோபர் 7இல், இஸ்ரேலில் ஹமாஸ் இயக்கம் நடத்திய தாக்குதலுக்குப் பதிலடியாக இன்றுவரை காஸா மீது கடும் தாக்குதல் நடத்திவருகிறது.
- இஸ்ரேல் அரசு இதில், இதுவரை 45,000க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டிருக்கின்றனர். ஈரான் ஆதரவைப் பெற்ற ஹிஸ்புல்லாவும் லெபனானைச் சேர்ந்த அமைப்பும் ஹமாஸுக்கு ஆதரவாகத் தாக்குதல் நடத்தியதால், லெபனான் மீதும் கடும் தாக்குதல் நடத்தியது.
- இஸ்ரேல், ஒருவழியாக இஸ்ரேலுக்கும் ஹிஸ்புல்லா அமைப்புக்கும் இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் அமலுக்கு வந்திருப்பதால் லெபனானில் அமைதி திரும்பிவருகிறது.
- காஸா போரை முடிவுக்குக் கொண்டுவர எகிப்து, கத்தார் போன்ற நாடுகளும் முயற்சி எடுத்துவருகின்றன.

**ஆட்சி மாற்றங்கள்**

- சிரியாவில் 50 ஆண்டு கால ஆசாத் குடும்பத்தின் அரசியல் பேயாட்டம் முடிவுக்கு வந்திருக்கிறது. ஹபீஸ் அல்-அசாத் 1971 ஆம் ஆண்டு முதல் 2000 வரை ஆட்சி நடத்திக் கொண்டிருந்தார். இவர் சோவியத் ஒன்றியத்துக்கு ஆதரவாகப் பனிப்போர்க் காலங்களில் செயல்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.
- அவருக்குப் பின்னர் அவரது மகன் பஷார் அல்-அசாத் பதவிக்கு வந்தார். சோஷாலிஸ் சித்தாந்தம் என்கிற பெயரில் பஷார் நடத்திய ஆட்சி சர்வாதிகார ஆட்சியாகவே இருந்தது.
- ஈரானுக்கும் ரஷ்யாவுக்கும் ஆதரவான பஷார் வளைகுடா ஒத்துழைப்பு கவுன்சில், மேற்கத்திய நாடுகள், இஸ்ரேல், துருக்கி நாடுகளுக்கு எதிரியாக இருந்தவர்.
- அல்காய்தா, ஐஎஸ், இதர தீவிரவாத இயக்கங்களை இவரது ஆட்சிக்கு எதிராக யுத்தம் நடத்திவந்த நிலையில், ஹாயத் தாஹ்ரிர் அல்-ஷாம் (ஹெச்.டி.எஸ்) அமைப்பு டிசம்பர் 8இல் சிரியாவைக் கைப்பற்றியிருக்கிறது.
- மத்திய ஆப்ரிக்க குடியரசு 2012 முதல் உள்நாட்டுப் போரால் சிக்கித் தவிக்கிறது. பெண்கள், குழந்தைகளுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்கள் இந்நாட்டில், தொடர்ந்து அதிகரித்துவருகின்றன.
- 2015 இல் ஏமன் அரசுப் படைகளுக்கும் ஹிதிப்போராளிகளுக்கும் இடையே உள்நாட்டுப் போர் தொடங்கியது. ஒன்பது ஆண்டுகளாக நடைபெற்று வரும் உள்நாட்டு யுத்தத்தால் அப்பாவி மக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள், 45 லட்சம் பேர் உள்நாட்டில், இடம்பெயர்ந்து வாழ்கிறார்கள்.
- நகோர்னோ-கார்பாத் பகுதிகள் அசர்பைஜானில் உள்ள நிலப்பரப்புகள் ஆகும்.
- சமீபகாலம் வரை அவற்றின் பெரும் பகுதிகள் அங்கீகரிக்கப்படாத அரசால் நிர்வகிக்கப்பட்டு வந்தன.
- இந்தப் பகுதிகளை ஆர்மீனியா தங்கள் நாட்டுடன் இணைக்க முயன்று வந்தது.
- இதை அன்றைய சோவியத் ஒன்றியம் ஏற்கவில்லை. இந்தப் பகுதியில் பெரும்பான்மையாக வசித்தவர்கள் ஆர்மீனிய இனத்தவர். மேலும் பல ஆண்டுகளாக இந்தப் பகுதியில் தேர்தல் நடைபெற்று, ஒரு தன்னாட்சி அரசாங்கம் செயல்பட்டது.
- சர்வதேச சட்டத்தின்படி ஏற்கத்தக்கதல்ல என்று அஜர்பைஜான் தெளிவுப்படுத்தியது.
- வங்கத்தேசத்தில் ஜனநாயகத்தன்மை குலைந்துவிட்டதாகவும், அடக்குமுறை அதிகரித்து விட்டதாகவும் கூறி மாணவர்கள் நடத்தி கிளர்ச்சியால், ஆகஸ்ட் 5இல் பிரதமர் பதவியிலிருந்து விலகிய ஷேக் ஹசீனா இந்தியாவில் தஞ்சம் அடைந்தது இந்த ஆண்டின் முக்கிய நிகழ்வுகளில் ஒன்று.
- ஆனால், இடைக்கால அரசின் தலைமை ஆலோசகரான முகமது யூனிஸின் ஆட்சியில் சிறுபான்மையினர் குறிப்பாக இந்துக்கள் மீதான தாக்குதல்கள் அதிகரித்தது.